**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 238/2023**

**07.04.2026.**

**PW - 1**

**வா.சா.1. அமிர்தவள்ளி, க/பெ. பன்னீர் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி எனது தம்பி. 2 ம் பிரதிவாதி எனது தாயார். புல எண்.54 சர்வே நம்பருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் - 90 குழீ என்று சொன்னார்கள். 90 குழீ எனது அப்பாவிற்கு சொந்தமானது என்றால் -சரிதான். எனது அப்பாவிற்கு தாவா சொத்து எவ்வாறு வந்தது என்றால் - கிரயம் மூலமாக வந்தது. சொத்து விவரத்தில் சர்வே எண்கள் 54/ஏ 4 மற்றும் 54/ஏ 2 ஆகியவற்றிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். சர்வே எண். 54/ஏ 2, 08.09.2010 ல் 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கியதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். மேற்படி சொத்துக்கள் எனது அப்பாவிற்கு நிறைய சொத்துக்களின் வருமானத்திலிருந்து 1ம் பிரதிவாதி வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். எனது அப்பா 2005 ல் காலமாகிவிட்டார். 2005 க்கு பிறகுதான் 1ம் பிரதிவாதி மதியழகன் 08.09.2010 ல் 2 வது அயிட்ட சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் - சரிதான். 2010 ல் 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்தை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. வழக்கு சொத்து சர்வே எண்.54/ஏ 4 ல் உள்ள 27.2/3 செண்ட்டுக்கு பாகம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். அதனால் தான் 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற ஆவணத்தை பொறுத்து அது சட்டப்படி செல்லாது என்று விளம்புகை கேட்கவில்லை என்றால் - சரிதான்.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.